

# தேர்தல் பிரச்சார செலவுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் இலங்கையின் தேர்தல் செயற்பாடு

## புதியதோர் தேர்தல் முறைமை – நாட்டு மக்களுக்கு பொறுப்புக் கூறும் மக்கள் பிரதிநிதி



இன்றைய சூழலில் இலங்கையில் நடைமுறையில் உள்ள விகிதாசார முறைமையினை மையப்படுத்திய தேர்தல் முறைமையானது வட்டார முறைமையினை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறைமையாக மாற்றப்பட வேண்டுமென்பது இந்நாட்டு மக்கள் மத்தியில் வேரூன்றிச் சென்றுள்ள கருத்தாக மாறியுள்ளது. அதேவேளை அடுத்து இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் கூட வட்டார முறைமையினை அடிப்படையாகக் கொண்டதாகவே இடம்பெறவுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் எவ்வகையான விசேட நிலைமைகள் காணப்பட்டாலும் வட்டார முறைமையை நோக்கி மீண்டும் பயணிக்கும் வகையில் இந்நாட்டு மக்கள் மத்தியில் ஒரு அழுத்தம் ஏற்படுத்தப்படுவதற்கு பல்வேறான காரணிகள் உள்ளன. விகிதாசார முறைமையில் காணப்படுகின்ற தவறான குணாம்சங்கள் தொடர்பாக விமர்சனம் செய்கின்ற பலர் முன்வைக்கும் தர்க்கரீதியான வாதமாவது தேர்தலினை ஒரு வியாபாரமாக்கி மாபெரும் தேர்தல் பிரச்சாரத்தினை மேற்கொண்டு வரையறையற்ற வகையில் பணத்தினை செலவழிக்கக் கூடிய அபேட்சகர்களுக்கு வெற்றி பெறுவதற்கு இந்த தேர்தல் முறைமையில் அதிக வாய்ப்பு இருக்கின்றது என்பதாகும். அவ்வாறு பெருமளவில் பணத்தினை செலவு செய்ய முடியாத, ஆயினும் மிக அவசியமாக மக்களை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டிய பெண்கள், இளம் தரப்பினர் மற்றும் வேறு துறைகளில் பணியாற்றிய தரப்பினர் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு காலகட்டத்தின் போது பெருமளவில் பணத்தினை செலவு செய்கின்ற அபேட்கசர்களுக்கு மத்தியில் பின்வாங்கும் நிலைமை இருப்பதென்பது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகும்.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity
CMEV



ஜனநாயகம் தொடர்பில் அப்பியாசம் செய்கின்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமையாக அமைவது மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு காலாகாலம் நடாத்தப்படுகின்ற தேர்தலாகும். அவ்வாறான தேர்தலொன்றில் போட்டியிட முன்வருகின்ற போட்டியாளர்களாகிய அபேட்சகர்களுக்கு “சமமான போட்டிக் களம்” (Level Playing Field) ஒன்றிற்கு பதிலாக சமமான சந்தர்ப்பங்களற்ற போட்டிக் களமொன்று உருவாக்கப்பட்டிருப்பின், அவ்வாறான நிலைமையினை எவ்வகையிலும் நியாயாப்படுத்த முடியாது. அவ்வாறானதொரு சூழலில் பிரஜைகளாகிய நாங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை? எமக்கு நெருக்கமான அயல் நாடுகள் அவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன? இந்நாட்டில் நேர்மையான தேர்தல் முறைமையொன்றினை உறுதிப்படுத்துவதற்காக இலங்கைப் பிரஜைகள் மென் மேலும் அவதானம் செலுத்த வேண்டிய அடிப்படை விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதனை இயலுமாக்குதற்கே இந்த கட்டுரை முயற்சி செய்கின்றது.

> “மிகச் சிறந்த போட்டி மற்றும் சமமான சந்தர்ப்பங்களைக் கொண்ட அரசியல் சூழல் என்ற இரு காரணிகளுள் சிறந்த சமபலத்தினை பேணுவதற்காக உரிய நிதி ஒழுங்குபடுத்தல் ஒழுங்குவிதிகள் உண்மையானதும் நியாயமானதுமாக இருக்க வேண்டும். அதன்போது அரசியல் கட்சிகள், அபேட்சகர்கள் மற்றும் பிரஜைகளது சமமான சந்தர்ப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அதன்போது பிரச்சார மூலப்பொருட்கள், பிரச்சார சேவைகள் மற்றும் அறிவித்தல்களை வெளியிடுதல் ஆகியவற்றுக்கான செலவுகள் நியாயமான வகையில் கவனிக்கப்பட வேண்டும்.” (தெற்காசியாவின் அரசியல் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக அமைந்த செலவுகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பான நவடில்லி வெளியீடு)

தேர்தலொன்றில் வெற்றியீட்டும் பொருட்டு அரசியல் கட்சிகளும் அபேட்கசர்களும் பயன்படுத்தும் முறைமைகள் ஒன்றுக்கொன்று மாறுபடலாம். அதன் உபாயங்களாக இலத்திரனியல், அச்சு மற்றும் சமூக ஊடகங்களையும் தகவல் தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்தி மக்கள் மயப்படுத்துவதற்காக செலவு செய்யும் நிதியின் அளவும் ஒன்றுக்கொன்று வேறுபட்டது. உலகில் மாபெரும் ஜனநாயக ரீதியான தேர்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளும் நாடு இந்தியாவாகும். இங்கு இறுதியாக அதாவது 2014ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது போட்டியிட்ட அபேட்சகர்கள் பொதுவாக அரசியல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு செலவு செய்திருந்த நிதியானது அளவு ரீதியாக 5 பில்லியன் அ.டொ ஆகும். அதாவது ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அதற்கு சமமான தேர்தலொன்றுக்காக செலவு செய்கின்ற நிதியிற்கு (7 பில்லியன் அ.டொ.) மாத்திரமே இது இரண்டாவதாகின்றது.

நாங்கள் எமது நாட்டில் நடாத்துகின்ற தேர்தலொன்றின் போது எந்தளவு நிதியினை அந்தந்த அரசியற் கட்சிகள் அல்லது அபேட்சகர்கள் செலவு செய்திருப்பார்கள் என்ற முறையான மதிப்பீடொன்று இதுவரையில் யாராலும் மேற்கொள்ளப்படவில்லை. சில அபேட்சகர்கள் இந்நாட்டில் இறுதியாக அதாவது 2015இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தாம் செலவு செய்த நிதியின் அளவு தொடர்பில் சிற் சில கருத்துக்களை இடைக்கிடையே தெரிவித்து வருகின்றனர்.

அதில் வெற்றி பெற்ற ஒரு அபேட்சகர் தெரிவித்தன் படி அவரது தேர்தல் பிரச்சார செலவு 800 இலட்சமாகும். அந்த நிதியின் அளவு எத்தனை பெரியதென்பதனை, இந்நாட்டில் பெரும்பாலான பிரதேச சபைகள் தமது அதிகார பிரதேசத்தில் மக்களுக்கான சேவையை வழங்குவதற்கு செலவு செய்கின்ற வருடாந்த செலவு 800 இலட்சம் ரூபாவினை தாண்டாத நிலைமையில் இருப்பதலிருந்து தெளிவாக விளங்கிக் கொள்ளுதற்கியலும்.

வரையறை அல்லது கட்டுப்பாடு இல்லாத தேர்தல் பிரச்சார செலவுகளுக்கு மத்தியில் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்ற நடவடிக்கையாக இருப்பது நாட்டின் எதிர்கால நிர்வாகமே என்பது இதன் படி தெளிவாகின்ற விடயமாகும். “ஒரு நபர் - ஒரு வாக்கு” (one person – one vote) என்ற பொது உடன்பாட்டுக் கோட்பாடு இதன் மூலமாக மீறப்படுகின்றது. அது மாத்திரமல்ல அதற்கு இணையாக எழுகின்ற கீழ்வரும் பிரச்சினைகள் மூலமாக இடம்பெறுவது நாட்டின் சிறந்த ஆட்சி சவாலுக்கு உட்படுத்தப்படுவதாகும்.

- சொத்துக்கள் தொடர்பிலான பேராசை காரணமாக அரசியல் முறைமையில் தவறான அழுத்தங்கள் இடம்பெறல்.
- தனியார் துறையினர் தேர்தல் செயற்பாடுகளுக்காக பங்களிப்பினை நல்கி, அரச கொள்வனவுகள் மற்றும் அபிவிருத்தி உள்ளடங்கலாக அரச நிதியினை ஊழலுக்கு உட்படுத்த வழிசமைத்தல்.
- அரச சொத்துக்களின் தவறான கையாளுகை
- சட்ட விரோத நிதிகள் மூலமாக அரசியல் அழுத்தங்களை செலுத்துதல்.
- வெளிநாட்டு நிதிகளின் அழுத்தங்கள் தேசிய அரசியல் நிலைமைகளை அச்சுறுத்தும் தன்மை.
- தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் அதிகப்படியான நிதி செலவு செய்யப்படுகின்ற நிலைமைகளூடாக புதிய அரசியல் பிரவாகங்கள் உருவாகக் கூடிய சூழ்நிலைகளை வரையறை செய்கின்றமை.

உலகின் எந்தவொரு ஜனநாயக சமூகத்தினதும் சாதகமான நிலைமை தீர்மானிக்கப்படுகின்ற ஒரு பிரதான காரணியாக அமைவது அந்த சமூகத்தினுள் அரசியல் ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டில் அப்போதிருக்கின்ற சூழ்நிலையாகும். ஜனநாயமானது மென்மேலும் வலுவடைகின்ற காரணியாக அமைவது ஏதேனும் சமூகத்தில் பிரஜைகள் ஒவ்வொருவருக்கிடையிலும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலமாக மட்டுமே. அதற்கான காரணம் ஜனநாயக சமூகத்தில் தலைமைத்துவம் தாங்கப்படுவது பிரஜைகள் மூலமாக என்பதனாலாகும்.

மக்கள் பிரதிநிதிகளாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசியல்வாதிகளைப் போலவே அரசியல் கட்சிகளும் பிரஜைகளுடன் தொடர்ச்சியான தொடர்பினைப் பேணுவது இதன்படி அவசியமான நிபந்தனையாகும். தேர்தல் காலப்பகுதியினுள் “வீடுவீடாகச் செல்லல்” தொடக்கம் தமது கொள்கை பரப்புரைகளை அச்சு மொழியில் பிரசுரித்து பகிர்ந்தளிப்பது வரை ஊடகங்கள் வாயிலாக தமது கட்சி ஆதரவாளர்களை தெளிவுபடுத்தும் வகையிலான விரிவான சூழ்நிலையில் பரந்துபட்ட செயற்பாடுகள் பலவற்றினை இதன்படி எந்தவொரு அபேட்சகரும் அவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கென பணமும் அவசியமாகின்றது. இதன் மூலமாக தெளிவாகின்ற விடயமாவது அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டினுள் நிதியானது மிக முக்கிய காரணியாக இருப்பதாகும். ஆயினும் அதனை உரியவாறு முகாமைத்துவம் செய்யாத சூழ்நிலையில் அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாடானது இயல்பாகவே சீரழிந்து விடும். இவ்வாறான பின்னணியினை ஆழமாக ஆராயும் போது இதன் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதென்பது புலப்படும்.

அரசியலின் தாய்ப்பால் பணமாகும் - ஐக்கிய அமெரிக்க குடியரசின் பிரசித்தி பெற்ற முன்னால் அரசியல்வாதி ஜேஸ் உன்று

### அரசியல் நிதிமயமாக்கல் (Political Finance) என்பபடுவது யாது?

அரசியல் கட்சிகளுக்கோ அல்லது அவற்றின் அபேட்சகர்களுக்கோ முறையாகவோ அல்லது முறையற்ற விதத்திலோ கிடைக்கக் கூடிய நிதி ரீதியிலான மற்றும் பொருள் ரீதியிலான வருமானங்களைப் போலவே செலவுகளும் இப்பெயரால் அழைக்கப்படும். சில வேளைகளில் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்கு உரித்தாகாத காலப்பகுதிகளிலும் கூட இடம்பெறலாம். அதேவேளை அவை நேரடியாக தேர்தல் செயற்பாடுகளுடன் தொடர்பற்றவையாகவும் இருக்கக் கூடும். இவ்வாறான நிதி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவது பல்வேறான வழிமுறைகளுடாக ஆகும். அவையாவன,

- ✓ அரச சொத்துக்களின் துஸ்பிரயோகம்
- ✓ வாக்குகளை பணம் கொடுத்து வாங்குதல்
- ✓ தேர்தல் செயற்பாடுகளுக்கு நிதி சேகரித்தல்
- ✓ சிற்சில நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் போது அதற்குரியதான செலவுகளுக்கு மூன்றாம் தரப்பு நபர்கள் தொடர்புபடல்.

தேர்தல் பிரச்சார செலவுகள் (Campaign Finance) என்பது அரசியல் நிதிமயமாக்கலில் தீர்மானமிக்கதொரு காரணியாகும். அதன் அடிப்படை வேறுபாடாக இருப்பது உரிய அனைத்து செலவுகளும் தேர்தல் பிரச்சாரத்தினை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதாகும். அரசியல் கட்சிகளினூ டாகவோ அல்லது சில வேளைகளில் அவ்வாறான கட்சியொன்றிற்கான தேர்தல் பிரச்சார முன்னேற்ற நடவடிக்கைகளின் பொருட்டு மேற்கொள்ளப்படும் செலவுகள் இதனுள் அடங்கும். அரசியல் கட்சிகளின் செலவுகளை பிரித்தறிவது என்பது மிகவும் கடினமான ஒரு செயலாகும்.

### தேர்தல் பிரச்சார செலவுகளை எதற்காக வரையறை செய்ய வேண்டும்?

தேர்தல் உட்பட அரசியல் நடவடிக்கைகள் இன்றைய சூழலில் இனியில்லை என்ற அளவிற்கு அவசியமான ஒரு அங்கமாக இருப்பது நிதியாகும். இதன் காரணமாக எழுந்துள்ள சிக்கல் நிலைமைகள் மிக மிக அதிகம். தேர்தல் ஒன்றின் போது பணத்தைப் பயன்படுத்தி இடம்பெறுகின்ற சில செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன. தேர்தல் பிரச்சார செலவுகள் உரிய வகையில் ஒழுங்குபடுத்தப்படாத நிலைமையில் பணத்தின் அதிகாரம் கையோங்குமே தவிர அரசியல் கொள்கைகள் உரிய வகையில் வெளிப்படுத்தடுவதில்லை.

### தேர்தல் பிரச்சார செலவுகளை கட்டுப்படுத்துவது புதியதொரு எண்ணக்கருவா?

தேர்தல் பிரச்சார செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக இந்நாட்டில் அதற்குரியதாக பிறிதான சட்டமொன்று இல்லாமை பாரிய குறைபாடாகும். ஆயினும் இந்நாட்டில் 1977இற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களின் போது அபேட்சகர்களது செலவுகளை தேர்தல்கள் ஆணையாளருக்கு மிகச் சரியாக ஒப்படைக்க வேண்டுமென்பது அத்தியாவசிய நிபந்தனையாக இருந்தது. 1964 இலங்கை பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் மூலமாக இதற்குரியதான சட்டங்கள் அவ்வேளையில் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கு சிறந்த உதாரணமாவது 1952ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெலிமட தொகுதியில் வெற்றியீட்டிய அபேட்சகர் ஒருவர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட இழக்கும் நிலைக்கு அப்போதைய தேர்தல் சட்டங்கள் வலுவாக இருந்தன. அதற்குரிய காரணி யாதெனில் தமது தேர்தல் செலவுகளை உரிய காலப்பகுதிக்குள் தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிப்பதற்கு உரிய உறுப்பினர் நடவடிக்கை எடுக்காமையே ஆகும். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒருவரது உறுப்புரிமை இழக்கப்பட்டதற்கான காரணமாக அமைந்த விடயம் தமது கொள்கைப் பிரகடனங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பதற்காக செலவு செய்யப்பட்ட வெறும் 25 ரூபாவினை தமது செலவு அறிக்கையில் உள்ளடக்கவில்லை என்ற குற்றச்சாட்டாகும்.




தேர்தல்கள் செயற்பாடுகளுக்கு உரியதாக சமமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வகையிலான சூழலொன்றினை உருவாக்க வேண்டியதானது மிக உச்ச மட்டத்திலான அரசியல் நடவடிக்கைகளின் பொருட்டு நிதிசார் பயன்பாடு தொடர்பில் அடையாளம் காணப்பட்ட பிரதான ஒரு விடயமாகும். இதன் கருத்தாக அமைவது அனைத்து கட்சிகளுக்கும், அனைத்து அபேட்சகர்களுக்கும் மற்றும் அனைத்து பிரஜைகளுக்கும் அரசியலில் ஈடுபடுவதற்கும் தாம் பிரதிநிதித்துவம் செய்கின்ற கருத்தினை சமூகமயப்படுத்துவதற்கும் சமமான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற வகையிலான ஒழுங்குபடுத்தல் மற்றும் இலகுபடுத்தல் உருவாக்கப்பட வேண்டும் என்பதாகும். (தெற்காசியாவின் அரசியல் நடவடிக்கைகளுக்கான செலவுகளை ஒழுங்குபடுத்தல் பற்றிய நவதில்லி பிரகடனம்)

### சட்டரீதியான பின்னணி :

தேர்தல் பிரச்சார செயற்பாட்டில் கட்சிகளுக்கோ அபேட்சகர்களுக்கோ பெற்றுக் கொடுக்கக் கூடிய பங்களிப்பு அல்லது செலவுகளை மேற்கொள்வதைப் போல அதற்குரியதான வரையறைகள் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்ட சட்டமொன்று இந்நாட்டில் இயக்கப்படுவதில்லை. அதேவேளை இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது மாவட்ட மட்டத்தில் 5% மேலதிகமாக வாக்கு விகிதத்தினைப் பெற்றுக் கொண்ட அரசியல் கட்சிகளுக்காக ஒரு வாக்கிற்கு 50 சதம் என்ற அடிப்படையில் நிதி வழங்கல், இலங்கை வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடாக வாக்காளர்களுக்கு தமது கொள்கைப் பிரகடனம் தொடர்பில் தெளிவுபடுத்தும் பொருட்டு அலைவரிசை நேரங்களை இலவசமாக பெற்றுக் கொடுத்தல் போன்ற சந்தர்ப்பங்கள் அரசியல் கட்சிகளுக்கும் சுயாதீன குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக தேர்தலுக்குரியதான கடிதங்கள் மற்றும் ஆவணங்களை பரிமாறிக் கொள்ளும் பொருட்டு அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு இலவச தபால் சேவை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதனையும் எடுத்துக் கூறலாம்.

“இலங்கையும் உறுப்பு நாடாக உள்ள ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்பாடு மற்றும் ஊழலை ஒழிப்பது தொடர்பான ஏனைய சில சர்வதேச உடன்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.” (19வது அரசியலமைப்பு சீர்திருத்தம்)





அரசியல் நிதிசார் விடயம் குறித்த ஏதேனும் முறையான ஒழுங்குபடுத்தல் பொறிமுறையொன்று தொடர்பில் கவனம் செலுத்துகையில் மேற்படி அரசியலமைப்பு ஏற்பாட்டினை மிகச் சிறந்த ஆரம்பமாக பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. அதற்குரியதான மிக முக்கிய விடயமாவது 2005 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட “2003 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கெதிரான உடன்பாட்டிற்கு (UNCAC) சார்பாக முதலில் அனுமதி வழங்கிய நாடு இலங்கை என்பதாகும். தேர்தல் பிரச்சார செலவுகளை ஏதேனும் ஒழுங்குபடுத்தல் முறைமைக்கு உட்படுத்தும் நோக்கில் உலகில் பல நாடுகள் முயற்சிகளை மேற்கொள்வதனை கண்காணிக்கக் கூடியதாக உள்ளது. அபேட்சகர்களது செலவுகளை அரச நிதியம் ஒன்றினூடாக பெற்றுக் கொடுப்பதற்கு ஜெர்மன் நடவடிக்கை எடுத்திருப்பதுடன் அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கும் நன்கொடைகள் மற்றும் அவை எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பது தொடர்பில் பிரித்தானியாவில் அரசியல் கட்சிகள் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்தியாவும் கூட தேர்தலின் போது கிடைக்கின்ற வாக்குகளுக்கு அமைவாக அரசின் மூலமாக செலவுகளை வழங்கும் முறைமையொன்றினை பின்பற்றுகின்றது. ஸ்கெண்டிடேனிய நாடுகள் பலவற்றில் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு அரசின் நிதிகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது.

கீழ்வரும் அட்டவணையினூடாக தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளில் அந்நாட்டில் இடம்பெறுகின்ற தேர்தல்களின் போது ஒரு அபேட்சகருக்கு செலவு செய்யக்கூடிய நிதியின் அளவு எல்லை மற்றும் அரசியல் கட்சியொன்றினால் செலவு செய்யக்கூடிய நிதியின் அளவு எல்லைகள்.

**செலவுகளை வரையறுத்தல் :**

| நாடு | அரசியல் கட்சியொன்றினால் செலவு செய்யக் கூடிய அளவு எல்லை காணப்படின் அந்த எல்லை யாது? | அபேட்சகர் ஒருவரால் செலவு செய்யக் கூடிய அளவு எல்லை காணப்படின் அந்த எல்லை யாது? |
|---|---|---|
| பங்களாதேஷ் | அபேட்சகர்களது எண்ணிக்கை 200 அல்லது அதற்கு அதிகமாக காணப்படுமாயின் உச்சமாக 45 டகா மில்லியன் (1,770,000) ஆகும். அபேட்சகர்கள் 101-200க்கு இடையில் எனில் உச்சமாக 30 டகா மில்லியன் (1,180,000) ஆகும். அபேட்சகர்கள் 51-100க்கு இடையில் எனில் 15 டகா மில்லியன் (588,000) ஆகும். அபேட்சகர்கள் 50 அல்லது அதற்கு குறைவு எனில் உச்சமாக 7.5 டகா மில்லியன் (294,000) என்பதோடு அபேட்சகர் ஒருவர் சார்பாக கட்சியினால் செலவு செய்யக்கூடிய நிதி 1.5 டகா மில்லியனை (59,000) தாண்டாது இருத்தல் வேண்டும். | தேர்தல் தொகுதி ஒன்றில் ஒரு அபேட்சகருக்கு உச்சமாக 1.5 டகா மில்லியன் (59,000 ரூபா) ஆகும். தேர்தல் செலவானது தேர்தல் தொகுதியில் இருக்கின்ற மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அமையப்பெறும். |
| கம்போடியா | உரியதல்ல | உரியதல்ல |
| இந்தியா | உரியதல்ல | மத்திய அரசினால் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. எல்லையைத் தீர்மானிப்பது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருத்துக்களை அறிந்து மத்திய அரசினால் ஆகும். |
| இந்தோனேசியா | உரியதன்று | உரியதல்ல |
| நேபாளம் | எல்லையினைத் தீர்மானிப்பது தேர்தல்கள் முகாமைத்துவ நிறுவனம் (EMB) ஆகும். | உச்ச எல்லை (தேர்தல்கள்) ஆணைக்குழுவின் மூலமாக தீர்மானிக்கப்படுகின்றது. |
| பாகிஸ்தான் | உரியதல்ல | தேசிய அரச சபை தேர்தலுக்கு ரூபா 1,500,000 (51,000) மாகாண உறுப்பினர் சபைத் தேர்தலுக்கு ரூபா 1,000,000 (34,000) |
| இலங்கை | உரியதல்ல | உரியதல்ல |

தேர்தல் பிரச்சார செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு உரியதான பல்வேறு வகையான சர்வதேச மத்தியஸ்தங்கள் பல தற்பொழுது நடைமுறையில் உள்ளன. அதில் 2015 டிசம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட தெற்காசிய அரசியல் நிதிசார் விடயங்களை ஒழுங்குபடுத்தும் நவடில்லி பிரகடனம் காலத்திற்கேற்ற முயற்சியாகும். தேர்தல் காலப்பகுதியிலும் அதற்கு அப்பால் அரசியல் நிதிசார் ஒழுங்குபடுத்தல்களை அறிமுகப்படுத்தும் போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய கோட்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தெற்காசிய தேர்தல் அலுவலர்களின் கூட்டமைப்பும் (FEMBoSA) தேர்தல் பிரச்சார செலவுகளை ஏதேனும் ஒழுங்குபடுத்தல் செய்வதற்குரியதாக தமது உச்ச பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருக்கிறது.

## தேர்தல் ஆணைக்குழு :

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றினை நடாத்துவதற்கு அவசியமான விரிவான அதிகாரங்களைக் கொண்ட அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடாக உருவாக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பில் இந்நாட்டு மக்கள் மத்தியில் மிகச்சிறந்த வரவேற்பு காணப்படுகின்றது. விசேடமாக அனைவரையும் உள்ளடக்கும் வகையிலான தேர்தல் முறைமையொன்றினை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் மேற்கொண்ட பெரும்பாலான செயற்பாடுகள் மிகவும் பாராட்டுக்குரியதாகும். இதன்படி தேர்தல் நடவடிக்கை செலவுகள் தொடர்பாக ஏதேனும் ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளக்கூடிய கடமையானது மிக உயரியது. தற்போது தேர்தல் பிரச்சார நிதிசார் விடயங்கள் தொடர்பாக ஒழுங்குபடுத்தல்களை அறிமுகப்படுத்துவது தமது மிக முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றென தமது உபாய மார்க்கத் திட்டத்தில் அறிமுகம் செய்துள்ளது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அவ்வாறான கடமையின் போது சட்டமா அதிபர் திணைக்களம், உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு ஆகியவற்றையும் விரிவான வகையில் தொடர்புபடுத்திக் கொள்வது அதன்போது முக்கியமானதாகும்.

## தெரியப்படுத்துதல் (வெளிப்படுத்துதல்) :

தேர்தல் பிரச்சார செலவுகள் தொடர்பில் கலந்துரையாடும் போது மிக முக்கியமான கோட்பாடாக அமைவது தெரியப்படுத்துவதாகும். நிதியினைப் பெறும் ஊடகமாக செயற்படும் தரப்பினர் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக தெரியப்படுத்தும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன்போது தெரியப்படுத்தும் கணக்குகள், அரசியல் கட்சிகள் அல்லது அபேட்சகர்கள் சுயாதீனமாக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். மேலும் தேர்தல் பிரச்சாரத்திற்கான நன்கொடைகளை வழங்கும் தரப்பினரை தெரியப்படுத்துவதற்கான ஊக்கத்தினை ஏற்படுத்துவதும் அவசியமாகும். அவசியமெனில் அதற்குரியதாக வரி ஊக்கப்படுத்தல்களைக் (Incentives) கூட பெற்றுக் கொடுப்பது தவறாகாது. தெரியப்படுத்தும் போது தீர்மானமிக்க காரணியாக அமைவது நன்கொடைகளை வழங்கியது யார்? எந்தளவு நிதி வழங்கப்பட்டது? யாருக்கு என்ன நோக்கத்திற்காக? என்ற விடயங்களை சரியாகத் தெரியப்படுத்துவதாகும். அவ்வாறான தெரியப்படுத்துதலுக்குரிய கால எல்லை யாதென்பது தொடர்பிலும் மிக ஆழமாக சிந்திப்பதும் பொருத்தமானதே. எவ்வாறாயினும் இந்நாட்டில் பின்னாய்வுப் பொறிமுறையானது கூறுமளவிற்கு திறமையானதாக செயற்படும் என்ற நம்பிக்கை மிக மிகக் குறைவு என்ற காரணத்தினால் தெரியப்படுத்தும் செயற்பாட்டை தேர்தல் காலப்பகுதிக்குள்ளேயே மேற்கொள்வது மிகவும் பயன்மிக்கதான மாற்றுவழியாக அமையும். அவசியமெனில் சில உதவி வழிகளை சுட்டிக்காட்ட முடியும். அயர்லாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளில் தெரியப்படுத்தலை மேற்கொள்ள வேண்டியது அனுமான எல்லைகளைத் தாண்டிய சந்தர்ப்பங்களின் போது மட்டுமே.

## தவறான கருத்தக்கள்

- செலவு வரையறை மூலமாக தனிநபர் வெளிப்படுத்தல் சுதந்திரம் மீறப்படுகிறது.
- யாதேனும் பதவியை வகிக்கின்ற நபரொருவருக்கு உள்ள வரவேற்பு மூலமாக கூடுதலாக நிதியினை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு குறிப்பிட்ட தரப்பினருக்கு காணப்படுகின்றது. எனவே செலவு வரையறையானது அவர்களது நடவடிக்கைகளை இலகுபடுத்தும்.
- மக்களுக்கு தகவல் (செய்தி) செல்வதில் காலதாமதம் ஏற்படும்.

மேற்படி கருத்துக்கள் எவ்விதமான தர்க்கரீதியான அடிப்படையில் தெரிவிக்கப்படுபவை அல்ல. எவ்வகையான வரையறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் பிறிதொரு நபர் தமக்கு சாதகமான வகையில் செயற்படுவது இயல்பானதே. ஆயினும் மேற்படி தவறான கருத்துக்களை இல்லாமல் செய்வதற்கான மிகச் சிறந்த வழியாக அமைவது ஒவ்வொரு தேர்தல் தொகுதி அல்லது மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக செலவு செய்யப்படுகின்ற நிதி தொடர்பில் விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றினை மேற்கொண்டு அதற்கு பின்னர் வரையறைகளை (எல்லைகளை) தீர்மானிப்பதாகும்.

## சந்தர்ப்பங்கள் :

தகவல் அறியும் சட்டம் இந்நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற காரணத்தால் தேர்தல் பிரச்சார செலவுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் கவனத்தை விரிவாக்கும் பொருட்டு பயன்படுத்த முடியும். தற்போது


වත්කම් හා බැරකම් ප්‍රකාශය

சொத்துக்களும் பொறுப்புக்களும் வெளிப்படுத்துதல்

DECLARATION OF ASSETS AND LIABILITIES

Declaration of Assets and Liabilities Law No. 1 of 1975 as amended by Act No. 74 of 1988

டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனமானது இந்நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் வருடாந்தம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கின்ற நிதி அறிக்கைகளது பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடுவது தொடர்பான சட்டம்

இந்த சட்டத்தினை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் செயற்பாட்டாளர்களது கருத்தாக அமைவது, இந்நாட்டில் தற்போதுள்ள மிகவும் பலமான சட்டங்களுள் ஒன்றாக இது காணப்படுகின்றது என்பதாகும். அது எந்தவொரு அரசியல்வாதியையும் பரீட்சித்து பார்க்கக் கூடிய மிகச் சிறந்த கருவியாகும். ஆயினும் இது இன்றைய சூழ்நிலையில் செயற்றிறனற்ற விதத்திலேயே கையாளப்படுகின்றது. அச் சட்டத்தில் காணப்படுகின்ற இயல்பான குறைபாடுகளை அகற்றுவது காலத்திற்கேற்ற தேவைப்பாடாக உள்ளது. மேலும் அபேட்சகர்களால் வழங்கப்படுகின்ற இந்த அறிக்கைகள் இதுவரையில் மிக இரகசியமான ஆவணங்களாகவே காணப்பட்டன. உரிய தரப்பினரால் வழங்கப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஆவணங்களை அதற்கு இணையாக சுயமாக மக்கள் கையாளும் வகையில் வெளிப்படுத்தும் நிலைக்கு கொண்டுவரும் அளவிற்கு முன்னேற்றகரமானதொரு அரசியல் கலாசாரம் ஒன்றினைக் கட்டியெழுப்புவது இன்று நம் மத்தியில் காணப்படுகின்ற மற்றுமொரு பிரதான சவாலாகும். அதற்கு மேலதிகமாக இந்த வெளியீடுகளை பெற்றுக் கொள்வதற்கு மாத்திரமல்ல அவற்றை வெளியிடுவதனோடு அது தொடர்பில் சமூக கலந்துரையாடல் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான சூழலை இந்நாட்டு பிரஜைகளுக்கு பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அண்மையில் சட்டமாக்கப்பட்ட தகவல் அறியும் சட்டத்தினை இந்நாட்டின் சமூக, அரசியல் முன்னேற்றத்தின் பொருட்டு பயன்படுத்திக் கொள்ளக் கூடியதொரு முன்னோடி நடவடிக்கையாக அமைவது இச் சுதந்திர இலங்கையின் பிரஜைக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலமாகவே.

## எதிர்கால நடவடிக்கைகள் :

இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமை கிடைக்கப் பெற்று எட்டு தசாப்தங்களாகின்றது. தேர்தல்கள் சிலவற்றில் ஏற்பட்ட சிற்சில சம்பவங்களைத் தவிர இலங்கைக்கேயுரிய மிகவும் பெருமையான தேர்தல் வரலாறு ஒன்று காணப்படுவதுடன் எவ்வகையான வடிவத்திலும் சரி தேர்தல் மறுசீரமைப்புக்கு உரியதான காரணியாக இருப்பின் அது இந்நாட்டுக்கேயுரிய சம்பிரதாயங்களை போற்றும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது வரையில் உலகின் எந்தவொரு நாட்டிலும் முழுமைபெற்ற தேர்தல் முறையொன்று உருவாக்கப்படவில்லை. அதன்படி இந்நாட்டில் தேர்தல் பிரச்சார செலவுகளையும் ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளதானது இந்நாட்டின் தற்போதைய அரசியல் பின்னணி தொடர்பில் முழுமையான தெளிவுடனேயே மேற்கொள்ள வேண்டும். அதன்படி தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களது விரிவான பங்களிப்புடன் இடம்பெறுகின்ற கலந்துரையாடல் சுற்றுக்கள் மூலமாக யாதேனும் ஒழுங்குபடுத்தல் முறைமையொன்று உருவாக்கப்படல் வேண்டும். அவ்வாறான சட்டரீதியான செயற்பாட்டின் போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.







- அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு உரியதான அடிப்படை விடயங்களை அறிமுகம் செய்கின்ற ஏதேனும் ஒழுங்குபடுத்தல் முறைமையொன்றின் அடிப்படையாக அமைய வேண்டும்.

- அறிமுகம் செய்யப்படுகின்ற எந்தவகையான ஒழுங்குபடுத்தல் முறைமையாயினும் அது அரசியல்வாதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையில் இடைவெளியினை ஏற்படுத்தாத ஒன்றாக இருத்தல் வேண்டும்.

- நிதி என்பது பொறுப்புடன் கூடிய அரசியலில் ஈடுபடுவதற்காக கிடைக்கப் பெறுகின்ற ஒரு வரப்பிரசாதம் என்பதனை அரசியல்வாதிகளுக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. அதன்படி வாக்காளர் மற்றும் அரசியல்வாதி என்ற இரு தரப்பினரும் இணங்கக் கூடிய முறைமை வரையில் கலந்துரையாடுவதும் வேறு சர்வதேச முறைமைகளில் காணப்படுகின்ற சிறப்பான கையாளுகைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதும் அவசியமாகும்.

விசேட குறிப்பு :

இந்தக் குறிப்பினை தயாரிக்கும் போது பின்வரும் ஆய்வுக் குறிப்புக்கள் மற்றும் வெளியீடுகளில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான சிறு அறிமுகம் - டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம்

அரசியலில் நிதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல் தொடர்பான அறிமுகம் - கலாநிதி மெக்னஸ் ஓமன், வெளியீடு, *International Foundation for Electoral Systems*

*Funding of political parties and Election Campaigns -A Handbook on political Finance -* வெளியீடு, *International Institute for Democracy and Electoral Assistance 2014*

தொகுப்பு : மஞ்சுள கஜநாயக்க

வெளியீடு : தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (*CMEV*)

அனுசரனை : டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் இலங்கை நிறுவனம்

*for more information please visit.*
www.cmev.org
www.tisrilanka.org
www.campaignfinance.lk